**சார்பு நீதிமன்றம்,திருத்துறைப்பூண்டி**
**அசல் வழக்கு எண். 127/2023**

நாள் 22.08.2024.

**வா.சா.1 இன்று மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்பட்டார்.**

நான் பிரதிவாதி மீது இவ்வழக்கு சொத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் எங்கள் இருவரையும் அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் விசாரணையின் போது பிரதிவாதி மகன் அவருக்கு எழுதிகொடுக்கப்பட்ட உயிலை காவல் நிலையத்தில் காட்டியதால் அதை பார்த்து நான் மேல்நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு உயில் எழுதி வைக்கப்பட்ட விபரம் தெரிந்த பிறகுதான் மோசடியாக காரணங்களை தெரிவித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு 2வது அயிட்ட சொத்தானது பிரதிவாதியின் மகனின் தனிப்பட்ட சொத்து என்பதால் அதில் எனக்கு எந்தவொரு பாகமும் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. 2வது அயிட்ட சொத்து என் தகப்பனாருக்கு எவ்வாறு கிடைத்தது என்ற விபரத்தை என்னுடைய வழக்குரையில் எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். தாத்தா சொத்து என்று சொல்லியுள்ளேன். அதன் பிறகு பூர்வீகமாக கிடைத்தாக சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு தாத்தா சொத்து என்று குறிப்பிடவில்லை என்று சொன்னாலும் வழக்கிற்காக பொய்யாக தெரிவிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாத்தா சொத்தை விற்றதற்கான ஆவணங்களை எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் மழை புயலில் அது காணமல் போகிவிட்டது. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் அவ்வாறு எந்த ஆவணமும் கிடையது என்றும் அதை மறைப்பதற்காக தான் மழை புயலில் காணமல் போகிவிட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரயில்ல. அதனால் தான் என் வழக்கில் தாத்தாவிற்கு பூர்விகமாக எப்படி கிடைத்தது என்பது குறித்து எந்தாவொரு விபரத்தையும் என் வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு ஊரில் பஞ்சாயத்தார் முன்னிலையில் பஞ்சாயத்து நடந்ததால் தான் பிரதிவாதி பதிலறிவிப்பு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு எந்த பஞ்சாயத்தும் நடைபெறவில்லை. 09.09.2021 அன்று

பிரதிவாதியின் மகன் பெயரில் எழுதிவைக்கப்பட்ட உயில் என்றும் அந்த உயிலை தாக்கல் செய்ய பிரதிவாதிகள் தரப்பில் தயாராக இருக்கிறார்கள் என்றும் அந்த உயில் கண்ட சொத்தை பொறுத்த மட்டும் எனக்கு எந்த வித பாகமும் கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. 14.10.2021 அன்று விஸ்வநாத கண்டிதர் இறந்த பிறகு உயில் அமலுக்கு வந்து பிரதிவாதியின் மகன்தான் அந்த சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் மகன் மைனர் என்பதால் அவரின் தகப்பனார் ஆன இந்த பிரதிவாதி கார்டியன் நிலமையில் சொத்தை அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். அப்பா இறக்கும் வரை நாங்கள் அனுபவத்தில் இருந்தோம். நாங்கள் கூட்டாக சொத்தை அனுபவித்து வந்து தொடர்பான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அப்பா உயிருடன் இருக்கும் வரை எந்த பிரச்சனையும் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதியின் தகப்பனார் விஸ்வநாத கண்டியர் சொத்தாக இருந்து அவர் உயிருடன் இருக்கும்போது சுய விருப்த்துடன் தனது பேரனான பிரதிவாதியின் மகன் மைனர் வீரமுத்துவிற்கு உயில் ஏற்படுத்தியுள்ள சொத்தை பொறுத்து பாகவீதம் நான் கேட்டது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. அதே போல் 1வது அயிட்ட சொத்து பிரதிவாதிக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டதாகும் என்றும் அதனால் அந்த சொத்திலும் பாகம் கேட்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல. 1வது அயிட்ட சொத்திற்கு எனது அப்பா பெயரில்தான் பட்டா வழங்கினார். அப்பா பெயரில் எத்தனை குழிக்கு பட்டா வழங்கியுள்ளார்கள் என்று தெரியாது. பார்த்தால் தான் தெரியும். அவ்வாறு என் அப்பா பெயரில் 1வது அயிட்ட சொத்தை பொறுத்து எந்த பட்டாவும் வழங்கவில்லை என்றும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரயில்ல. என் பெயரில் கிரய பத்திரம் எழுதப்பட்ட அதே நாளில் என் அப்பா பெயரிலும் ஒரு கிரய பத்திரம் பதிவு செய்யப்பட்ட நிலையில் அனைவரும் சேர்ந்து விளக்குடி கிராமத்தில் உள்ள 89/1ஏ1 மற்றும் 89/1பி2 வழக்கு சொத்துகளை சேர்த்து இந்த வழக்கில் பாகப்பிரிவினை கேட்காததால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. அதே போல் மன்னார்குடியில் என் மகன் பெயரிலும் என் பெயரிலும்வாங்கிய சொத்துகளையும் இந்த வழக்கில் ஒரு சொத்துகளாக கேட்காத காரணத்தினால் அந்த காரணத்தினாலும் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா பெயரில் உள்ள சொத்துகளை அடமானம் வைத்து அதன் மூலம் கிடைத்த பணத்தை கொண்டுதான் மன்னார்குடியில் சொத்து வாங்கினேன் என்றால் சரியல்ல. இந்தியன் வங்கியில் கடன் பெற்று தான் அந்த

சொத்தில் வீடு கட்டினேன். வழக்கில் சொல்லியுள்ள வழக்கு மூலம் தவறு என்றாலும் செலுத்திய நீதிமன்ற கட்டணம் தவறு என்றாலும் சொத்தை சரியாக மதிப்பீடு செய்யவிலலை என்றாலும் சரயில்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் பாகப்பிரிவினை கேட்பதற்கனா உகந்த ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துகளை கூட்டாக வாங்கியதற்கு எந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கில் நான் கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளபடி செய்யபட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**